**சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்**
முன்னிலை **திரு.S.பாஸ்கரன், M.A., LLM.,**
சார்பு நீதிபதி, ஆரணி,
2025–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26ஆம் நாள் புதன்கிழமை
**I.A.No.03/2024 in O.S.No.88/2022**
**TNTM 03000212/2022**

K.ஆறுமுகம் ... மனுதாரர்/பிரதிவாதி

/எதிராக/

M.சங்கர் ... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு என் முன்பாக 22.09.2025 அன்று விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.R..ராஜன், M.A.B.L., அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.சரவணன்,M.Com.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும், சான்றாவணங்களை பரிசீலித்தும், இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் பிரசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

அசல் வழக்கு 22.11.2024ம் தேதியன்று தள்ளுபடி ஆகிவிட்டதால் இ.ம.எண்.1/2022ல் ஷெட்யூல் சொத்து பேரில் பிறப்பிக்கப்பட்ட ஜப்தியை நீக்கம் செய்ய கோரி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 38 விதி 9ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:–**

இம்மனுவில் மனுதாரர். அசல் வழக்கில் பிரதிவாதி ஆவார். மனுதாரர் அசல் வழக்கை எதிர்மனுதாரர்/வாதிக்கு பணம் தரவேண்டும் எனக்கோரி தாக்கல் செய்தார். மேற்படி நெம்பர் தாவா தாக்கல் செய்யும்போது மனுதாரருக்கு பாத்தியப்பட்ட மனு ஷெட்யூல் சொத்தை உடன் ஜப்தி செய்யவேண்டும் என எதிர்மனுதாரர் இ.ம.எண்.1/2022 ஐ தாக்கல் செய்கிறார். மேற்படி இ.ம.எண்.2/2022 மனுவில் கனம் கோர்ட்டார் அவர்கள் உத்தரவுப்படி மனுதாரருக்கு பாத்தியப்பட்ட ஷெட்யூல் சொத்து உடன் ஜப்தி செய்யப்பட்டது. மேற்படி நெம்பர் தாவாவில் மனுதாரருக்கு சம்மன் வந்து வழக்கறிஞர் மூலம் ஆஜராகி ஆன்சர் தாக்கல் செய்து தாவா விசாரணைக்கு வந்தபோது 22.11.2023ல் எதிர்மனுதாரர் வராததால் தாவா தள்ளுபடி செய்யப்பட்டது. மீண்டும் எதிர்மனுதாரர் தாவாவை ரெஸ்டோர் செய்து விசாரணை

செய்யபடவேண்டும் என இ.ம.எண்.2/2024 என தாக்கல் செய்து அது கனம் கோர்ட்டார் அவர்களால் 06.09.2024, 25.09.2024, 15.10.2024, 22.10.2024, 24.10.2024 என வாய்தாக்கல் போடப்பட்டு பின்னர் கடைசியாக கனம் கோர்ட்டார் அவர்களால் 24.10.2024ல் தாவா மீண்டும் தள்ளுபடி செய்யப்பட்டது. அதன் பின்னர் எதிர்மனுதாரர் தாவாவை ரெஸ்டோர் செய்ய மனு இன்றுவரை தாக்கல் செய்யவில்லை. மேலும் தாவா தள்ளுபடி செய்யப்பட்ட பின்னர் தாவாவில் இ.ம.எண்.1/2022ல் ஜப்தி செய்யப்பட்டதை நீக்கம் செய்ய வேண்டியது அவசியம் இல்லாவிட்டால் மனுதாரருக்கு அநேக கஷ்ட நஷ்டம் ஏற்பட்டுவிடும். எனவே மேற்படி வழக்கில் இ.ம.எண்.1/2022ல் ஷெட்யூல் சொத்து பேரில் செய்யப்பட்ட ஜப்தியை நீக்கம் செய்து உத்தரவு பிறப்பிப்பது அவசியம் என்று இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

2. **<u>எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்:-</u>**

மேற்படி மனுதாரர்/பிரதிவாதி அசல் வழக்கானது 22.11.2024ல் தள்ளுபடி ஆகிவிட்டதால் இ.ம.எண்.1/2022ல் ஷெட்யூல் சொத்து பேரில் பிறப்பிக்கப்பட்ட ஜப்தியை நீக்கம் செய்ய உத்தரவு பிறப்பிக்கக்கோரி தாக்கல் செய்துள்ள மனுவானது சட்டப்படியும், நியாயப்படியும், செல்லத்தக்கதல்ல தள்ளுபடி செய்யப்படவேண்டிய ஒன்றாகும். எதிர்மனுதாரர் இந்த எதிருரையில் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிர ஏனையவற்றை மனுதாரரே/பிரதிவாதியே முழுமையாக நிருபிக்க கடமைப்பட்டவர் ஆவார். மேற்படி மனுதாரர் தனது உறுதிமொழிந்துரையில் பிரதிவாதிக்கு சம்மன் வந்து வழக்கறிஞர் மூலம் ஆஜராகி ஆன்சர் தாக்கல் செய்து தாவா விசாரணைக்கு வந்தபோது 22.11.2023ல் எதிர்மனுதாரர் வராததால் தாவா தள்ளுபடி செய்யப்பட்டது என்றும், மீண்டும் எதிர்மனுதாரர் தாவாவை ரெஸ்டோர் செய்து விசாரணை செய்யப்பட வேண்டும் என இ.ம்.எண்.2/2024 என தாக்கல் செய்து அது கனம் கோர்ட்டார் அவர்களால் 06.09.2024ல் அனுமதிக்கப்பட்டது என்றும், பின்னர் விசாரணையில் 13.09.2024, 25.09.2024, 15.10.2024, 22.10.2024, 24.10.2024 என வாய்தாக்கள் போடப்பட்டு பின்னர் கடைசியாக 24.10.2024ல் தாவா மீண்டும் தள்ளுபடி செய்யப்பட்டது என்றும், அதன்பின்னர் எதிர்மனுதாரர் தாவாவை ரெஸ்டோர் செய்ய மனு இன்றுவரை தாக்கல் செய்யவில்லை என்றும், தாவா தள்ளுபடி செய்யப்பட்ட பின்னர் தாவாவில் இ.ம.எண்.1/2022ல் ஜப்தி செய்யப்பட்டதை நீக்கம் செய்ய வேண்டியது அவசியம் இல்லாவிட்டால் மனுதாரருக்கு அநேக கஷ்ட நஷ்டம் ஏற்படும் என்றும் கூறியுள்ள சங்கதிகள் யாவும் முற்றிலும் பொய்யானதாகும்.

3. மேற்படி எதிர்மனுதாரர் /வாதி தாக்கல் செய்துள்ள அசல் வழக்குரையை இந்த எதிருரையின் ஒரு அங்கமாக பாவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேற்படி எதிர்மனுதாரர் வாதி அசல் வழக்கை மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக தாவா தொகை மற்றும் செலவுத்தொகை வசூலிக்கக்கோரி தாக்கல் செய்துள்ளார். மேலும், மனுதாரர்/ பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தை ஜபதி செய்யக்கோரி I.A.No.1/2022 என்ற மனு தாக்கல் செய்து ஜப்தி செய்யப்பட்டது. மேற்படி அசல் வழக்கை எதிர்மனுதாரர்/வாதி அவரது தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.ஏழுமலை என்பவரை வைத்து நடத்தி வந்தார். அதன்பிறகு மேற்படி வழக்கை நடத்தி வந்த மேற்சொன்ன வழக்கறிஞர் அவர்கள் வழக்கு விசாரணையின் போது எதிர்மனுதாரர்/வாதிக்கு தகவல் கொடுப்பதாக கூறியிருந்தார். அதன்படி மேற்படி வழக்கறிஞர் திரு.எஸ்.ஏழுமலை என்பவர் கூறியதன் பேரில் 14.09.2023 அன்று எதிர்மனுதாரர்/வாதி நீதிமன்றத்தில் ஆஜராகி அவர் தரப்பில் PW1 முதல் விசாரணை (பிரமாண வாக்குமூலம்) தாக்கல் செய்யப்பட்டு, அன்றைய தினமே மேற்படி வழக்கறிஞர் அவர்கள் அசல் வழக்கில் குறுக்கு விசாரணைக்கு வாய்தா தெரிவிப்பதாகவும், அப்பொழுது நீதிமன்றத்திற்கு வரவேண்டும் என்று கூறியிருந்தார். அதன்படி மேற்படி எதிர்மனுதாரர்/வாதி அவரது வழக்கறிஞர் குறுக்கு விசாரணைக்கு வாய்தாதேதி தெரிவிப்பார் என்றும், அப்பொழுது நீதிமன்றத்திற்கு செல்லலாம் என காத்திருந்தார்.

4. இதற்கிடையில், மேற்படி வழக்கறிஞர் அவர்கள் எதிர்மனுதாரர்/வாதியிடம் மேற்படி வழக்கானது 22.11.2023 அன்று ஒருதலைபட்சமாக தள்ளுபடி செய்யப்பட்டது என்றும், ஆதலால் மேற்படி தள்ளுபடி செய்யப்பட்ட உத்தரவை ரத்துசெய்ய வேண்டுமென்றால் மனு தாக்கல் செய்ய வேண்டும் என்றும் கூறி, மேற்படி எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் கட்டளை 9 விதி 9 மனு தாக்கல் செய்யப்பட்டு, அது I.A.No.2/2024 என நெம்பராகி கனம் நீதிமன்றத்தார் அவர்களால் 06.09.2024 அன்று அனுமதிக்கப்பட்டது. மேலும், மேற்படி அசல் வழக்கில் எதிர்மனுதாரர் /வாதியை குறுக்கு விசாரணைக்கு வாய்தாவின் போது தெரிவிப்பதாக கூறியிருந்தார். அதன்படி மேற்படி எதிர்மனுதாரர்/வாதி அவரது வழக்கறிஞர் குறுக்கு விசாரணைக்கு வாய்தாதேதி தெரிவிப்பார் என்றும், அப்பொழுது நீதிமன்றத்திற்கு செல்லலாம் என காத்திருந்தார். இதற்கிடையில், மேற்படி வழக்கறிஞர் அவர்கள் எதிர்மனுதாரர்/வாதியிடம் மேற்படி வழக்கானது 24.10.2024 அன்று ஒருதலைபட்சமாக தள்ளுபடி செய்யப்பட்டது என்றும், ஆதலால் மேற்படி தள்ளுபடி செய்யப்பட்ட உத்தரவை ரத்து செய்யவேண்டுமென்றால் மனு தாக்கல் செய்ய வேண்டும் என்று கூறி மனுவில் கையெழுத்து பெற்றுக்கொண்டார். அதன்பிறகு, மேற்படி எதிர்மனுதாரர்/வாதி அவரது வழக்கறிஞர் தேதி தெரிவித்தால் நீதிமன்றத்திற்கு செல்லாம் என காத்திருந்தார்.

5. இதற்கிடையில், மேற்படி எதிர்மனுதாரர்/வாதிக்கு, மேற்படி I.A.No.3/2024 மனுவில் 08.01.2025 அன்று நீதிமன்றத்தில் ஆஜராவதற்காக நோட்டிஸ்

கிடைக்கப்பெற்றது. மேற்படி எதிர்மனுதாரர்/வாதி அவரது தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.ஏழுமலை என்பவரை வைத்து ஆஜராகியிருக்கும் போது, நீதிமன்றத்திலிருந்து 08.01.2025 என்று வாய்தாதேதி குறிப்பிட்டு நோட்டீஸ் கிடைக்கப்பெற்றதை கண்டு அதிர்ச்சிக்கு உள்ளானார். இதுகுறித்து மேற்படி எதிர்மனுதாரர்/வாதி அவரது வழக்கறிஞரான திரு.எஸ்.ஏழுமலை என்பவரிடம் நீதிமன்றத்திலிருந்து கிடைக்கப்பெற்ற நோட்டிஸ் கொண்டு காண்பிக்கும்போது, ஜப்தி நீக்கம் செய்வதற்காக மேற்படி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், 24.10.2024 அன்று தள்ளுபடி செய்யப்பட்ட உத்தரவை ரத்துசெய்ய தாக்கல் செய்யப்பட்ட கட்டளை 9 விதி 9 மனு திருப்பப்பட்டதாகவும் கூறினார். மேற்படி எதிர்மனுதாரர்/வாதி தாக்கல் செய்த அசல் வழக்கானது இரண்டு முறை தள்ளுபடி செய்யப்பட்டதால், மேற்படி ஒருதலைபட்ச தள்ளுபடி உத்தரவை ரத்துசெய்வதற்காக நீதிமன்றத்தில் தாக்கல் செய்து திருப்பப்பட்ட கட்டளை 9 விதி 9 மனுவையும், அவரது கை கட்டினையும் மேற்படி வழக்கறிஞர் அவர்களிடமிருந்து திரும்ப பெற்றுக்கொண்டு, தற்போது வேறு ஒரு வழக்கறிஞர் வாயிலாக மேற்படி I.A.No.3/2024 மனுவில் வாய்தா தேதியான 08.01.2025 அன்று ஆஜராகி உள்ளார். மேலும் திருப்பப்பட்ட கட்டளை 9 விதி 9 மனுவையும், திருப்பப்பட்டதற்கான காரணங்களை நிவர்த்தி செய்து கனம் நீதிமன்றத்தில் 03.02.2025 அன்று திரும்ப தாக்கல் வாதி (Representation) செய்யப்பட்டுள்ளது. மேற்படி எதிர்மனுதாரர்/வாதி நீதிமன்றத்தில் 03.02.2025 அன்று திரும்ப தாக்கல் செய்த கட்டளை 9 விதி 9 மனுவானது நெம்பர் செய்யப்படாமல் உள்ளது.

6. மேற்படி எதிர்மனுதாரர்/வாதியின் வழக்கானது 22.11.2023 அன்று தள்ளுபடி செய்யப்பட்டதும், 13.09.2024, 25.09.2024, 15.10.2024, 22.10.2024. 24.10.2024 ஆகிய தேதிகளில் எதிர்மனுதாரர்/வாதி நீதிமன்றத்தில் ஆஜராகாமல் போனதும் 24.10.2024 அன்று தள்ளுபடி செய்யப்பட்டதும், வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல, மேற்படி காரணங்களால் ஏற்பட்டதாகும். மேலும், எதிர்மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள கட்டளை 9 விதி 9 மனுவானது நெம்பர் செய்யப்பட்டு, அவற்றில் விசாரணை செய்து உத்தரவு பிறப்பிக்கும்பட்சத்தில், மேற்படி மனுவின் மீது உத்தரவு பிறப்பிக்கப்படுவதற்கு கனம் நீதிமன்றத்தார்க்கு ஏதுவாக இருக்கும். இல்லையென்றால் வெவ்வேறு உத்தரவுகள் பிறப்பிக்க வாய்ப்புகள் உள்ளது. மேலும் நீதிமன்றத்தார் அவர்களால் பிறப்பிக்கப்பட்ட ஜப்தி உத்தரவானது, அவற்றை நீக்குவதற்கு அசல் வழக்கின் முடிவில் தீர்மானிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். மேலும், மேற்படி மனுவில் மனுதாரர்/பிரதிவாதி கூறியுள்ளவாறு ஜப்தியை நீக்கம் செய்ய உத்தரவு பிறப்பித்துவிட்டதால், மேற்படி எதிர்மனுதாரர்/வாதி தாவா தொகையை வசூல் செய்வது அரிதாகிவிடும். இதனால் அவருக்கு பெருத்த கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டுவிடும்.

7. மேலும், மேற்படி மனுதாரர்/பிரதிவாதி தாக்கல் செய்துள்ள அபிடவிட் 2ம் பாராவில் இ.ம.எண்.2/2022 என குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி அசல் வழக்கில் அதுபோன்ற எந்த ஒரு மனுவும் நெம்பராகவில்லை. மனுதாரர் தரப்பில் தெளிவுபடுத்தி திருத்தம் செய்ய வேண்டியது அவசியமாகிறது. எனவே, மேற்படி மனுதாரர்/பிரதிவாதி தாக்கல் செய்துள்ள மனுவானது நிலைக்கத்தக்கதல்ல, நிராகரிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். எனவே, மேற்படி மனுதாரர்/பிரதிவாதியின் மனுவை எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டியும், கவனக்குறைவால் இவ்எதிருரையில் சொல்லப்படவேண்டிய சங்கதிகள் ஏதேனும் விடுப்பட்டிருந்தால் கூடுதல் எதிருரை தாக்கல் செய்ய எதிர்மனுதாரர் உறுதியேற்கிறார்.

8. இம்மனுவில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனையில் உள்ள சங்கதி என்னவென்றால், மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கத்தக்தா? இல்லையா? என்பதே ஆகும்.

9. <u>**தீர்வு:–**</u>

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. இருதரப்பிலும் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. அசல் வழக்கில் இந்த மனுதாரர் பிரதிவாதி ஆவார். இ.ம.எண்.1/2022ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் பேரில் மனுதாரர்/பிரதிவாதியின் சொத்து மீது தீர்ப்புக்கு முன்பு ஜப்தி செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கு கடந்த 22.11.2023ம் தேதி வாதியின் வருகையின்மையால் தள்ளுபடி செய்யப்பட்டது. இ.ம.எண்.2/2024 உத்தரவின் பேரில் அசல் வழக்கில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. மீண்டும் வாதி வருகையின்மையினால் 24.10.2024ல் அசல் வழக்கு தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்டது. மேற்படி தள்ளுபடி உத்தரவை ரத்து செய்யவும், அசல் வழக்கை மீண்டும் விசாரணைக்கு எடுக்கவும், வாதி தரப்பில் மனு தாக்கல் செய்யப்படவில்லை. எனவே இ.ம.எண்.1/2022ல் பிறப்பிக்கப்பட்ட ஜப்தியை நீக்கம் செய்ய இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

10. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையில், அசல் வழக்கு தவறுகைக்காக 24.10.2024ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டதை ரத்து செய்யவும், மீண்டும் வழக்கை விசாரணைக்கு எடுக்கவும் வாதி தரப்பில் கட்டளை 9 விதி 9 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று கூறி மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்து எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது.

11. மனுதாரர்/வாதி தரப்பில் அசல் வழக்கு தவறுகைக்காக கடந்த 24.10.2024 அன்று தள்ளுபடி செய்யப்பட்டதை ரத்து செய்ய தாக்கல் செய்த இ.ம.எண்.6/2025 இந்நீதிமன்றத்தால் கடந்த 11.11.2025ம் தேதி அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், அசல் வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்பட்டு வா.சா.1ஐ பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்வதற்காக வாய்தா ஏற்பட்டுள்ளது. அசல் வழக்கு மீண்டும் விசாரணைக்கு ஏற்க்கப்பட்டுள்ளது என்பதால் மனுதாரர் ஜப்தி

உத்தரவை ரத்து செய்ய கோரியிருக்கும் இம்மனு ஏற்கும் வகையில் இல்லை என்று முடிவு செய்து இம்மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.

**முடிவாக,** இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை குறித்து உத்தரவு இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26ஆம் நாளாகிய இன்று என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

BASKARAN S

Digitally signed by BASKARAN S
Date: 2025.11.26 17:32:59 +0530

சார்பு நீதிபதி,

ஆரணி.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>** இல்லை

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றிவணங்கள்</u>** இல்லை

BASKARAN S

Digitally signed by BASKARAN S
Date: 2025.11.26 17:33:08 +0530

சார்பு நீதிபதி,

ஆரணி.